அரசாங்க நிருவாகச்
சுற்றறிக்கை இல: 06/97

எனது இல: 11/950ஈ/1151/4
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளு
மன்ற அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07,
1997.02.03..ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

தாபன விதிக்கோவையின் 1/11 ஆம் அத்தியாயத்தின்
12:5:4, 12:6:1 மற்றும் 1992.12.14ஆந்
தேதிய 34/92ஆம் இலக்க அரசாங்க நிருவாகச்
சுற்றறிக்கையை திருத்துதல்

தாபன விதிக்கோவையின் 1/11ஆம் அத்தியாயத்தின் 12:5:4ஆம் 12:6:1ம் உப பிரிவுகள் மற்றும் 1992.12.14ஆந் தேதிய 34/92ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை பின்வருமாறு திருத்தப்படுகிறது.

"12:5:4 உத்தியோகத்தர் ஒருவர் நிரந்தரமாக பதவியொன்றை வகித்துக்கொண்டு, மற்றொரு பதவியொன்றில் பதில்கடமை புரிவாராயின் அவருக்கு இதன்கீழ் குறிப்பிட்டுள்ளவாறு கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும். இரு பதவிகளுக்குமுரிய முழுச் கருமங்களையும் அவர் செய்ய வேண்டியிருப்பின் அவர் பதிற்கடமை புரியும் பதவிக்குரிய தொடக்கச் சம்பளத்தின் 25% வீதத்துடன் அவருக்குப் பொறுப்பான பதவிக்குரிய மொத்த ஊதியம், பதவி ஒன்றுக்காக சம்பளம் விதிக்கப்படாதிருக்கும் சந்தர்ப்பங்களில் 25%க்குச் சமமான சம்பளம், உத்தேசச் சம்பளமாக வேண்டியதுடன், அதற்கான கோரிக்கை செய்தபின் திறைசேரியின் செயலாளரை கலந்தாலோசித்து அரசாங்க நிருவாக அமைச்சரின் செயலாளர் அதை தீர்மானிக்க வேண்டும்."

"12:6:1 பதிற்கடமை புரியும் உத்தியோகத்தர் 12:5:4ஆம் உபபிரிவில் குறிப்பிட்டுள்ளவகுதியைச் சேர்ந்தவராயின் செலுத்த வேண்டிய தொகை பதிற் கடமை புரியும் பதவியின் தொடக்கச் சம்பளத்தின் 25%தினை மீறுதலாகாது."

02. இது 1997.01.01ஆந் திகதி தொடக்கம் செயற்படும். பதிற்கடமை புரியும் காலம் ஆகக்கூடிய 3 மாதங்களுக்கு வரையறுக்கப்பட வேண்டும். அந்தக் காலத்தில் ஏற்புடைய வெற்றிடங்களை நிரப்பாவிடின் அந்தப் பதவியை தொடர்ந்தும் வைத்திருப்பதற்கான தேவையை சம்பந்தப்பட்ட அமைச்சுச் செயலாளர் விசாரித்துப்பார்த்தல் வேண்டும்.

03. இதன்படி தாபன விதிக்கோவையின் ஏற்புடைய உபபிரிவு திருத்தப்படுகிறது.

திறைசேரியின் ஒத்திசைவுடன் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்: ஆர்.எஸ். ஜயரத்ன